சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 15.04.2025 SC 129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஷாஜகான் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.10 | | | |

---

முதல் விசாரணை

நான் கடந்த 31.07.2022 அன்று ஒட்டன்சத்திரம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து பணி மூப்பு அடிப்படையில் ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 04.01.2019 அன்று கூடலூர் வட்ட ஆய்வாளர் பணியில் இருந்த போது எனது வட்டத்திற்கு கட்டுப்பட்ட கூடலூர் தெற்கு காவல் நிலைய குற்ற எண்.5/2019, கீழ் பிரிவு 294 பி, 355, 324, 506 (i) ,உ/இ 109 இதச பிரிவுகளின் கீழ் சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்கள் பதிவு செய்துவைத்திருந்த வழக்கினை அவரே முதல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளிடமிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் சம்பவமானது 307 இதச உ/இ 109 என சட்ட மாறுதல் செய்த பின்னர் என்னுடைய மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். சட்ட மாறுதல் அ றிக்கை அசாஆ 12 ஆகும். நான் மேற்படி சம்பவ இட சாட்சிகளை மீண்டும் விசாரணை செய்தேன். சாட்சிகள் சார்பு ஆய்வாளர் முருகேசனிடம் கூறிய சங்கதிகளை மீ்ணிடும் என்னிடம் கூறியதால் புதிதாக அவர்களிடம் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அதன் பின்னர் தேர்தல் பணி மாறுதல் சம்மந்தமாக போடி காவல் நிலையத்திற்கு பணி மாறுதல் பெற்று சென்றுவிட்டதால் வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக திரு.சுரேஷ்குமாரிடம் ஒப்படைத்தேன்.

குறுக்கு விசாரணை.

நான் சாட்சிகளை எந்த தேதியில் மறு விசாரணை செய்தேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 04.01.2019 அன்று செய்தேன்.

சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சென்றேன். வழக்கு எதிரிகளுக்கும் அசா 1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்பவமும் இல்லை என்றும், நான் சாட்சிகளை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.